DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 191 /2018

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | :Raja | Father/Husband Name: sinnaadaikan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.03.19. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது கேசம்பட்டியில் வசிக்கிறேன். ஆடு மாடு மேய்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் பகல் சுமார் 3 மணியளவில் நான் என் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தபோது ஆட்டுகுட்டி சத்தம்கேடடதில் சென்று பார்த்தபோது ரோட்டில் வைத்து 3 நபர்கள் ஒரு ஆட்டுக்குட்டியை இருசக்கர வாகனத்தில் வைத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது நானும் ஜெயராமனும் விரட்டிச்சென்று கருப்பு கோயில் அருகே அவர்களை பிடித்து காவல்நிலையத்தில் கொண்டுசென்று ஒப்படைத்தோம். ஆஜர் எதிரிகள் இருவரையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம், ஒரு எதிரி இன்று வரவில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்துள்ளார்கள். பின்னர் காவல்நிலையத்தில் எதிரிகள்மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து ஆட்டுக்குட்டியை பெற்றுக்கொண்டேன். ஆட்டுக்குட்டியின் புகைப்படம் சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சாட்சி ஜெயராமன் பக்கத்து ஆட்டுக்காரர். சாட்சி சின்னம்மா எனது தாயார், மற்றொரு சின்னம்மா சகோதரி ஆவார். சாட்சி அழகு எனது மனைவி. வயக்காட்டிற்கு அருகில் ஒயின்சாப் உள்ளது என்றால் சரியல்ல. ஒயின்சாப் 3 கி.மீ. தள்ளி உள்ளது. மெயின்ரோட்டிலிருந்து எனது தோட்டம் சுமார் 200 மீட்டர் தூரத்தில் உள்ளது. ஆட்டுக்குட்டியை தூக்கிக்கொண்டு போகும்போது எதிரிகளை தெரியும். அதற்கு முன்பு சரிவர தெரியவில்லை.

எதிரிகளோடு ஆட்டுக்குட்டியையும் காவல்நிலையம் கொண்டு சென்று புகார் கொடுத்தேன். புகாரை நான் எழுதவில்லை. நான் சொல்ல சொல்ல அவர்கள் எழுதினார்கள். வாகனத்தின் பதிவு எண்ணை அவர்களே எழுதிக்கொண்டார்கள். எனது வயல்காட்டிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரம் துரத்திச்சென்றோம். அன்று சேக்கிபட்டி திருவிழா. கிராம மக்கள் அந்த ரோட்டில் நடமாட்டம் இருந்தது. அங்கிருந்த கிராமத்துக்காரர்கள் எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள். பிடித்து வைத்திருந்த நபர்களின் பெயர் எனக்கு தெரியாது. நாங்கள் விரட்டிச்சென்றோம். எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கு எந்த சம்மந்தமுமல் இல்லை என்றும், சந்தேகத்தின்பேரில் எதிரிகள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், நான் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 191 /2018

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | :Chinnamma | Father/Husband Name: Sinnaadaikan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.03.19. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது கேசம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகன். எதிரிகளை தெரியாது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் பகல் 3 மணியளவில் ஆடு கத்திய சத்தம்கேட்டு எனது மகன் அய்யோ அம்மா என்று கத்தினார். எனது மகன் விரட்டிச்சென்று 3 நபர்களை இருசக்கர வாகனத்தில் ஆட்டுக்குட்டி வைத்திருந்ததை பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தார். போலீசார் என்னை விசாரித்தனர். ஆட்டுக்குட்டியை நீதிமன்றத்தில் மனுச் செய்து பெற்றுக்கொண்டேன்.

குறுக்கு விசாரணை:

சம்பவத்தின்போது நான் வீட்டிலிருந்தேன். சம்பவத்தை பற்றி என் மகன் சொல்லித்தான் தெரியும். யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது. என் மகனுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 191 /2018

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | :Chinnamma | Father/ Name: Sinnaadaikan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.03.19. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது கேசம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 எனது தம்பி. சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் பகல் 3 மணியளவில் ஆடு கத்திய சத்தம்கேட்டு எனது தம்பி அய்யோ அம்மா என்று கத்தினார். எனது தம்பி விரட்டிச்சென்று 3 நபர்களை இருசக்கர வாகனத்தில் ஆட்டுக்குட்டி வைத்திருந்ததை பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தார். யாரை பிடித்தார் என்று எனக்கு தெரியாது. எதிரிகளை நான் பார்த்ததில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவத்தன்று சேக்கிபட்டி திருவிழா நடந்தது, ரோட்டில் மக்கள் நடமாட்டம் இருந்தது. களவுபோன பிறகுதான் என் தம்பி புகார் கொடுத்தார். ஆட்டுகுட்டி கிடைத்தது தெரியும், எங்கிருந்து கிடைத்தது என்று எனக்கு தெரியாது. என் தம்பிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 191 /2018

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | :Alagu | Father/ Name: | Raja |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.03.19. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது கேசம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 எனது கணவர். எதிரிகளை பார்த்ததில்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் பகல் 3 மணியளவில் எங்கள் தோட்டத்தில் கட்டியிருந்த ஆடு கத்திய சத்தம்கேட்டு எனது கணவர் சென்று பார்த்தார். அப்போது 3 நபர்கள் ஒரு ஆட்டுக்குட்டியை இருசக்கர வாகனத்தில் வைத்து தூக்கிச்சென்றார்கள். அவர்களை எனது கணவரும் ஜெயராமன் என்பவரும் துரத்திச்சென்று போனார்கள். கருப்புக்கோயிலின் அருகிலிருந்தவர்கள் எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள். அவர்களை போலீசாரிடம் ஒப்படைத்து நீதிமன்றத்திலிருந்து ஆட்டுக்குட்டியை பெற்றுக்கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

எனது வீடு வயக்காட்டில் தனியாக உள்ளது. சம்பவத்தின்போது தோட்டத்தில் நான் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். யார் ஆட்டுக்குட்டியை தூக்கிப்போனார்கள் என்று எனது கணவர் சொல்லித்தான் எனக்கு தெரியும். இந்த சம்பவத்திற்கு 2 நாட்களுக்கு முன்பு எனது கணவர் ஆட்டுக்குட்டி காணவில்லை என்று புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் டி.வி.எஸ்.-50 வாகனத்தில் சென்றார். எனது கணவர் சத்தம்போட்டுக்கொண்டே சென்றார். பக்கத்து கிராமத்துக்காரர்கள் நடமாட்டம் இருந்தது. சத்தம்போட்டு போகும்போது ஊர்க்காரர்கள் பிடிக்கவில்லையா என்றால் அது தெரியாது. நான் காவல்நிலையம் போகவில்லை. முதல் விசாரணையில் சொன்ன சம்பவங்கள்

எனது கணவர் சொல்லித்தான் தெரியும். எனக்கு சம்பவத்தை பற்றி தெரியாது என்றும், என் கணவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 191 /2018

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | :Perumal | Father/ Name: | Chinnaiah |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 15.03.19. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

முதல் விசாரணை:

நான் தற்போது பட்டூரில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கேசம்பட்டியில் வைத்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் வரைந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் அதில் நானும் ஜெயராமன் என்பவரும் கையெழுத்து செய்தோம். பார்ை வமகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சாட்சி ராஜா எனக்கு மைத்துனர். போலீசார் காலை 10 மணிக்கு வந்தார்கள். கேசம்பட்டியிலிருந்து 3 கி.மி. தள்ளி சம்பவ இடம் உள்ளது. சம்பவ இடத்திற்கு நன் வரும்போது 6, 7 நபர்கள் இருந்தார்கள். பார்வை மகஜரில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் பிராந்தி கடை உள்ளது என்றால் தவறு. என் மைத்துனர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.